DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 226 / 2019

Deposition of PW5/ LW8

| | | |
|---|---|---|
| Name | : | திரு.மணிகண்டன் |
| Father's / Husband Name | : | அழகர்சாமி |
| Village | : | ஆண்டிபட்டி |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26.09.2025.

எதிரி ஆஜர்.

**அரசுத் தரப்பில் BNSS பிரிவு 348 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அரசு தரப்பில் கூடுதல் சாட்சியாக முதல் விசாரணை :**

1.) நான் தற்போது ஆண்டிபட்டி உட்கோட்ட காவல் நிலையங்களுக்கு கூடுதலாக சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான தீபக் சார்பு ஆய்வாளர் பணி மாறுதலாகி சென்றுள்ளபடியால் அவர்களுடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் இந்த வழக்கின் கோப்பினை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன்.

2.) கடந்த 13.01.2019 ம் தேதி 19.45 மணிக்கு சார்பு ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது அழகபுரியை சேர்ந்த ராமர் மனைவி ஜானகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று இராஜதானி காவல் நிலைய குற்ற எண்.18/2019 பிரிவுகள் 294(பி),323,506(1) இ.த.ச. மற்றும் 4 of TNPHW Act பிரகாரம் வழக்கு பதிவுசெய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** .

3.) அன்றைய தினம் 18.45 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான மகேஷ் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மாதிரி வரைபடம்

**அ.சா.ஆ.4** . சாட்சிகள் 1 ஜானகி, 2 ராமன், 3 முத்துப்பாண்டி, 4 பிரபு, 5 மகேஷ், 6 முருகன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் தனித்தனியே பதிவு செய்துள்ளார். எதிரி முன்ஜாமின் பெற்றதால் எதிரியை கைது செய்யவில்லை. பின்பு 15.02.2019 ம் தேதி அனைத்து விசாரணைகளையும் முடித்து எதிரி மீது மேற்கண்ட அதே குற்ற பிரிவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் கு.வி.**

1. இவ்வழக்கின் புகார் எழுத்து பூர்வமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதியின் மகன் எதிரியின் மனைவிக்கு தேவையில்லாமல் போன் மூலம் தொடர்பு கொண்டு பிரச்சனை செய்துவந்தால் தான் எதிரி வாதியிடம் தங்கள் மகன் என் மனைவியிடம் பிரச்சனை செய்ய வேண்டாம் என்று சொன்னார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி விஷயத்தில் இருந்து தப்பிப்பதற்காக வாதி பொய்யான புகாரினை அளித்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியை எதிரி தாக்கியதாக சொல்லப்படும் கம்பு இவ்வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதியை எதிரியை தாக்கவும் இல்லை, அசிங்கமாக பேசவும் இல்லை , கொலைமிரட்டல் விடவில்லை என்றால் சரியல்ல.

2. இவ்வழக்கின் சம்பவயிடம் அருகே உள்ள சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு எவ்வித சிகிச்சையும் எடுக்கவில்லை என்றால் சரிதான் நாட்டு மருத்துவம் செய்ததாக சொல்லியுள்ளார். வழக்கில் சொல்லப்பட்டது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், வழக்கிற்கும் எதிரிக்கும் தொடர்பில்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் , எதிரிக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல் ஆஜர் எதிரி மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.09.26 19:20:19 +0530

Judicial Magistrate,
Andipatti.